**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 8 |
| Name | : | அருள்சாம்ராஜ், வயது 40 |
| Father Name/Husband Name | : | டேனியல் |
| Village | : | சேர்ந்தமரம் |
| Taluk | : | கடையநல்லூர் |
| Calling | : | ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 04.03.2024 ஆம் தேதி இரவு 07.30 மணிக்கு கோவில்பட்டி, லட்சுமி தெரு, பிச்சையா மகன், ரமணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமேகலை அவர்கள் நிலைய புகார் ரசீது எண். 121/2024 ன்படி பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் அவர்களின் விசாரணைக்கு வைத்துள்ளார். மேற்படி மனுவை மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்கட்ட விசாரணை செய்து 05.03.2024 ஆம் தேதி மாலை 05.30 மணிக்கு மேற்படி மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.34/2024 இ.த.ச பிரிவுகள் 323, 506(1) ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(அந்த மனு ரசீது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு

எடுத்துக் கொண்டு 05.03.2024 ஆம் தேதி 06.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பால்ராஜ் மற்றும் ரவிசந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். (**அந்த வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3 பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. உமா அவர்களை விசாரித்து அ.சா.1ன் காயச்சான்றை பெற்றுள்ளேன். பின்னர் விசாரணையை முடித்து எதிரி மீது 18.03.2024 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

**5.** வழக்கு சம்பவ இடம் கோவில்பட்டி, நேஷனல் பொறியியல் கல்லூரி என்றால் சரிதான். சம்பவம் 04.03.2024 அன்று மதியம் 02.00 மணிக்கு நடைபெற்றது. அன்றைய தினம் இரவு 07.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது. அ.சா.1 05.03.2024 ஆம் தேதி மதியம் 03.50 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். 05.03.2024 அன்று மாலை 05.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகுதான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. புகார்மனுவில் சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமேகலை மனுவைப் பெற்று மனு ரசீது கொடுக்கப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல, முதல் விசாரணை அதிகாரி ரவிசந்திரன் என்று CSR ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக மனு ரசீது கொடுக்கும்போது இரு தரப்பினரையும் விசாரிப்போம் என்றால் மனுவின் தன்மையை பொறுத்து மாறுபடும். மேற்படி மனுரசீதில் யாரை எல்லாம் விசாரித்தீர்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் அவர்கள் கல்லூரி சென்று விசாரித்ததில் சம்பவம் உண்மை என தெரிந்தால் முதல் தகவல் அறிக்கை அவசியம் என தெரிந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

7. சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் யாரையெல்லாம் விசாரித்தார்கள் என்று வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் துலங்காது. மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிசந்திரன் உண்மையாக விசாரித்திருந்தால் அந்த விவரம் வழக்கு கோப்பில் துலங்கியிருக்கும் என்றால் சரியல்ல. வரைப்படத்தின்படி சம்பவ இடம் கல்லூரி இயந்திரவியல் துறை Staff cabin க்கு வெளியே என்றால் சரியல்ல. புகார்மனுவில் அ.சா.1 க்கு முகத்திலும், தலையிலும் மற்றும் முதுகிலும் எதிரி தாக்கியதாகவும், அதில் அ.சா.1ன் முகத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 க்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் எதிரி தாக்கியதால் ஏற்பட்டது கிடையாது என்றால் சரியல்ல.

8. மனு ரசீதில் விசாரணை முடிவு குறிப்பிடபடவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் மனு முடிக்கப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக கல்லூரி நிர்வாகத்திடமிருந்து எந்த புகாரும் வரவில்லை என்றால் சரிதான். அதற்குரிய காரணங்கள் புகார்மனுவிலோ, எனது விசாரணையிலோ துலங்குமா என்றால் பாதிக்கப்பட்ட அ.சா.1 புகார் கொடுத்துள்ளதால் கல்லூரி நிர்வாகத்தின் புகார் தேவையில்லை. அ.சா.1 புகார் கொடுத்துள்ளது போல் உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் கல்லூரி நிர்வாகத்தினரே புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கல்லூரியின் இயந்திரவியல் துறைக்கு வெளியே கண்காணிப்பு கேமராக்கள் இருந்ததாகவும், அந்த பதிவுகளை என்னிடம் கொடுத்தாகவும் கல்லூரி முதல்வர் அவரது சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, கல்லூரி வீடியோ பதிவுகள் தரப்படவில்லை, கல்லூரியின் புகைப்படம் கொடுக்கப்பட்டுள்ளது.

9. மேற்படி கல்லூரியின் ஆசிரியர் மற்றும் மாணவரின் சம்பவ தேதிக்குரிய வருகைப்பதிவேட்டை கைப்பற்றினீர்களா என்றால் கைப்பற்றினேன், வழக்கு கோப்பில் உள்ளது. அந்த ஆவணங்கள் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இறுதி அறிக்கையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் அ.சா.1யை, எதிரி தாக்கி கொலைமிரட்டல் விடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

10.அ.சா.1 நடக்காத சம்பவத்திற்காக எதிரியை பழிவாங்க பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைப்படம் போன்ற ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் குற்ற இறுதி அறிக்கை சட்ட பிழையுடையது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open
court in the presence of
accused and read over to
the witness and
acknowledged by him/her to
be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.